جمعية الـدعوة والإرشـاد
وتوعية الجاليـات بالخبـر

# அல்குர்ஆன் கூறும் நரகங்கள்

தொகுப்பு

அல்கோபார் அழைப்பகம், தமிழ்ப் பிரிவு

# அல்குர்ஆன் கூறும் நரகங்கள்

01

سَقَرَ

## ஸகர்

### அல்குர்ஆனில் ஸகர் எனும் வார்த்தை இடம் பெற்றுள்ள இடங்கள் : 4

அவனை நான் **ஸகர்** (எனும்) நரகில் புகச் செய்வேன்.

**ஸகர்** என்னவென்பதை உமக்கு எது விளக்கும்?

அது (எவரையும்) மிச்சம் வைக்காது, விட்டு விடவும் செய்யாது.

(அது சுட்டுக் கரித்து மனிதனின்) மேனியையே உருமாற்றி விடும்.

அதன் மீது பத்தொன்பது (வானவர்கள்) இருக்கின்றனர்.

**அல்குர்ஆன் 74: 26-30**

# அல்குர்ஆன் கூறும் நரகங்கள்

01-B

(வலக்கைப்புறத்துத் தோழர்களான சுவனவாசிகள்) குற்றவாளிகளைக் குறித்து, "உங்களை ஸகர் (எனும் நரகத்தில்) நுழைய வைத்தது எது?" (என்று கேட்பார்கள்.)

அவர்கள் (பதில்) கூறுவார்கள்: தொழுபவர்களில் நின்றும் நாங்கள் இருக்கவில்லை.

அன்றியும், ஏழைகளுக்கு நாங்கள் உணவும் அளிக்கவில்லை.

(வீணானவற்றில்) மூழ்கிக்கிடந்தோருடன், நாங்களும் மூழ்கிக்கிடந்தோம்.

இந்த நியாயத் தீர்ப்பு நாளை நாங்கள் பொய்யாக்கிக் கொண்டும் இருந்தோம். உறுதியான (மரணம்) எங்களிடம் வரும்வரையில் (எனக் கூறுவர்).

அல்குர்ஆன் 74: 41-47

# அல்குர்ஆன் கூறும் நரகங்கள்

02

# هَاوِيَةٌ

# ஹாவியா

## அல்குர்ஆனில் ஹாவியா எனும் வார்த்தை இடம் பெற்றுள்ள இடங்கள் : 2

அவன் தங்குமிடம் **ஹாவியா** தான்.

இன்னும் **ஹாவியா** என்ன என்று

உமக்கு அறிவித்தது எது? அது சுட்டெரிக்கும்

(நரகத்தின்) தீக்கிடங்காகும்.

அல்குர்ஆன் 101 : 09-11

# அல்குர்ஆன் கூறும் நரகங்கள்

03

# الْحُطَمَةَ

# அல்ஹுதமா

## அல்குர்ஆனில் அல்ஹுதமா எனும் வார்த்தை இடம் பெற்றுள்ள இடங்கள் : 2

**ஹுதமா** என்ன என்பதை உமக்கு அறிவித்தது எது?

அது எரிந்து கொண்டிருக்கும் அல்லாஹ்வின் நெருப்பாகும்.

அது (உடலில் பட்டதும்) இருதயங்களில் பாயும். நிச்சயமாக

அது அவர்களைச் சூழ்ந்து மூட்டப்படும். நீண்ட கம்பங்களில்

(அவர்கள் கட்டப்பட்டவர்களாக).

அல்குர்ஆன் 104: 4-8

# அல்குர்ஆன் கூறும் நரகங்கள்

04

جَهَنَّمُ

# ஜஹன்னம்

## அல்குர்ஆனில் ஜஹன்னம் எனும் வார்த்தை இடம் பெற்றுள்ள இடங்கள் : 77

எவர்கள் நிராகரித்தார்களோ, அவர்களுக்கு **ஜஹன்னம்** (எனும் நரக) நெருப்புத்தான் இருக்கிறது. அவர்கள் மரித்துப் போகும்படியாக அவர்களுடைய காரியம் முடிவு செய்யப்பட மாட்டாது. அன்றியும் அந்(நரகத்)திலுள்ள வேதனை அவர்களுக்கு இலேசாக்கப்படவும் மாட்டாது. இவ்வாறே காஃபிர் ஒவ்வொருவருக்கும் நாம் கூலிகொடுப்போம்.

**அல்குர்ஆன் 35: 36**

# அல்குர்ஆன் கூறும் நரகங்கள்

05

# سَعِيْرٌ

# ஸஈர்

## அல்குர்ஆனில் ஸஈர் எனும் வார்த்தை இடம் பெற்றுள்ள இடங்கள் : 16

’அன்றியும் எவர் அல்லாஹ்வின் மீதும் அவன் தூதர் மீதும் ஈமான் கொள்ளவில்லையோ  நிச்சயமாக அக்காஃபிர்களுக்கு நாம் (**ஸஈர்** எனும் ) கொழுந்து விட்டெரியும் (நரக) நெருப்பைச் சித்தம் செய்திருக்கிறோம்.

அல்குர்ஆன் 48: 13

# அல்குர்ஆன் கூறும் நரகங்கள்

06

لَظَى

# லழா

## அல்குர்ஆனில் லழா எனும் வார்த்தை இடம் பெற்றுள்ள இடங்கள் : 1

அவ்வாறு இல்லை, ஏனெனில் நிச்சயமாக (**லழா** எனும்) அது கொழுந்துவிட்டு எரியும் நெருப்பாகும். அது (சிரசுத்) தோல்களை (எரித்து) கழற்றி விடும் (நேர்வழியைப்) புறக்கணித்துப் புறங்காட்டிச் சென்றோரை அ(ந்நரகத்தீயான)து அழைக்கும். அன்றியும், பொருளைச் சேகரித்து, பிறகு (அதைத் தக்கபடி செலவு செய்யாமல்) காத்துக் கொண்டானே (அவனையும் அது அழைக்கும்)

**அல்குர்ஆன் 70: 15-18**

# அல்குர்ஆன் கூறும் நரகங்கள்

07

# النَّارُ

## அந்நார்

அல்குர்ஆனில் அந்நார் எனும் வார்த்தை இடம் பெற்றுள்ள இடங்கள் : 126

மனிதர்களையும் கற்களையும் எரிபொருளாகக் கொண்ட நரக நெருப்பை அஞ்சிக் கொள்ளுங்கள். (அந்த நெருப்பானது இறைவனையும் அவன் வேதத்தையும் ஏற்க மறுக்கும்) காஃபிர்களுக்காகவே அது சித்தப் படுத்தப்பட்டுள்ளது.

அல்குர்ஆன் 2: 24

# அல்குர்ஆன் கூறும் நரகங்கள்

08

# جَحِيْم

# ஜஹீம்

## அல்குர்ஆனில் ஜஹீம் எனும் வார்த்தை இடம் பெற்றுள்ள இடங்கள் : 26

பார்ப்போருக்கு நரகம் வெளிப்படுத்தப்படும். எனவே, எவன் வரம்பை மீறினானோ இந்த உலக வாழ்க்கையைத் தேர்ந்தெடுத்தானோ, அவனுக்கு நிச்சயமாக ( **ஜஹீம்** எனும் ) நரகந்தான் தங்குமிடமாகும்.

அல்குர்ஆன் 79: 36-39